
ISBN:978-81-687272-4-3

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



ஆர் கே சண்முகம் செட்டியார்

செந்தமிழறிஞர்கள் 108

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/65.%20%E0%AE%9A%E0%AE%B0%E0%AF%8D.%E0%AE%86%E0%AE%B0%E0%AF%8D.%E0%AE%95%E0%AF%87.%E0%AE%9A%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%AE%E0%AF%81%E0%AE%95%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_1892

செந்தமிழ்சிற்பிகள்

சர்.ஆர்.கே.சண்முகனார் (1892 - 1953)



அறிமுகம்

சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் (அக்டோபர் 17, 1892 – மே 5, 1953) இந்தியப் பொருளாதார நிபுணர். இந்தியாவின் போற்றத்தக்க பாராளுமன்ற வாதி, சிறந்த பேச்சாளர், தமிழிசை இயக்கத்தை உருவாக்கி வேரூன்றச் செய்தவர். இந்திய அரசின் முதல் நிதியமைச்சர், மற்றும் முதல் தமிழ் சபாநாயகர் 1947 ஆம் ஆண்டு இந்திய விடுதலைக்குப் பின்னர் பதவியேற்ற இந்திய அரசின் முதல் நிதியமைச்சர், மற்றும் இந்திய நாடாளுமன்றத்தின் முதல் தமிழ் சபாநாயகர் என்ற பல பெருமைகளை உடையவர். நாட்டுப் பிரிவினை போது எழுந்த கணக்கு பிணக்குகளுக்கு சரியான முடிவு கண்டவர்.

வாழ்க்கைக் குறிப்பு

தமிழ்நாடு, கோயம்புத்தூர் நகரில் பல தொழிற்சாலைகளுக்கு உரிமையாளர்களான வாணிய செட்டிக் குடும்பத்தில் ஆர். கந்தசாமி செட்டியார் - ஸ்ரீரங்கம்மாள் தம்பதிக்கு மூத்த மகனாகப் பிறந்தார். சண்முகனாருடன் பிறந்தவர்கள் மூன்று தம்பிகள், இரண்டு தங்கைகள். கோவை யூனியன் உயர்நிலைப் பள்ளியில் தமது பள்ளிக் கல்வியைப் பயின்றார். பின்னர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பட்டப் படிப்பையும், சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பையும் முடித்தார். மிகக் குறுகிய காலமே வழக்குரைஞராகப் பணியாற்றி, பின்னர் பொதுவாழ்வில் ஈடுபட்டார்.

பொதுப்பணி

ஆர்.கே.எஸ்., பொது வாழ்வில் பல முக்கிய பொறுப்புகளை வகித்தார். கோவை நகர் மன்ற உறுப்பினராகவும், நகர் மன்றத் துணைத் தலைவராகவும், சென்னை ராஜதானியின் சட்டமன்ற உறுப்பினராவும், இந்திய தேசிய சட்ட சபையின் (அன்றைய பாராளுமன்றம்) உறுப்பினராகவும் திறம்படப் பணியாற்றினார். சர் ஆர்.கே.சண்முகம் செட்டி 1920-இல் அன்னி பெசன்ட் அம்மையாருடன் சில மாதங்கள் இங்கிலாந்து சென்று பல பொதுக் கூட்டங்களில் உரையாற்றி , இந்திய சுயாட்சிக்காக தமது கருத்துகளை வெளியிட்டார். கொச்சி அரசின் திவானாகப் பணிபுரிந்தார். 1931 முதல் 1945 வரை கொச்சி அரசின் திவானாகப் பணிபுரிந்தார். அவரது ஆட்சிக்காலத்தில் அனைத்து துறைகளிலும் நிர்வாக சீர்மை மேம்பட்டது. அவரது கண்காணிப்பில் கொச்சி அரசின் தலைமையகம் நவீனப்படுத்தப்பட்டது.

1929 இல் பன்னாட்டு தொழிலாளர் நிறுவன மாநாட்டில் இந்தியப் பிரதிநிதியாக கலந்து கொண்டார்.
1923 முதல் 1929 வரை மத்திய சட்டமன்ற கீழவையில் உறுப்பினராக இருந்தார். அந்த அவையின் துணைத்தலைவராக 1931-33 ஆண்டுகளிலும், தலைவராக 1933-34களிலும் பதவியில் இருந்தார்.
1938 ஆம் ஆண்டு ஜெனிவாவில் உலகநாடுகள் சங்க (League of Nations) கூட்டத்திற்கு இந்தியாவின் சார்பாக சென்றிருந்தார்.
1944 ஆம் ஆண்டு பிரெட்டன் வுட்ஸ் உலக நாணய மாநாட்டிலும் கலந்து கொண்டார்.
1945 ஆம் ஆண்டு மன்னர்கள் சங்கத்திற்கு அரசியலமைப்பு

ஆலோசகராகப் பணியாற்றினார். இந்திய அரசியலமைப்பு சட்டமன்றத்திலும் உறுப்பினராகப் பங்கேற்றார். கொறடாவாக ஆர்.கே.சண்முகம் நாடாளுமன்றத்தின் சுயராஜ்யக் கட்சியின் (காங்கிரஸ்) தலைவராக நேருவும், செயலாளராக சித்தரஞ்சன் தாசும், கொறடாவாக ஆர்.கே.சண்முகனாரும் பணியாற்றிச் சிறப்பித்தனர்.

இந்தியாவிலுள்ள மிகப்பெரிய நூலகங்களில் ஒன்று

இளம் வயதிலேயே பல மொழிகளைக் கற்றறிந்தார். கோவை மாநகரில் ரேஸ் கோர்ஸ் பகுதியில் இருந்த இவரது ஹவார்டன் எனும் இவரது இல்லத்திலிருந்த நூலகம் இந்தியாவிலுள்ள வீட்டு நூலகங்களில் மிகப் பெரிய வீட்டு நூலகங்களில் ஒன்று.

கல்விப்பணி

கோவை அவினாசி சாலையில் 1953ஆம் ஆண்டு தனது தாயார் சீரங்கம்மாள் நினைவாக ஆர்.கே. சீரங்கம்மாள் கல்வி நிலையம் என்று 6 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை போதிக்கும் கல்வி நிறுவனம் ஒன்றைத் துவக்கினார். ஆனால், பள்ளி துவக்க விழாவிற்கும் அதன் செயல்பாட்டினைக் காணும் நிலையில் 1953 மே 5ஆம் நாள் இயற்கையெய்தினார். இந்திய நாடாளுமன்றத்தின் முதல் தமிழ் சபாநாயகர், இந்திய தேசிய சட்ட சபையின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், இந்திய நாடாளுமன்றத்தின் முதல் தமிழ் சபாநாயகர் என்ற பெருமைக்குரியவர். அவர் போராட்டங்களிறி சட்டவழியே தன்னாட்சி மற்றும் விடுதலை பெறுவதை விரும்பினார். அவர் நீதிக்கட்சியில் சிலகாலம் உறுப்பினராக இருந்தார். பின்னர் சுதந்திராக் கட்சியின் முதன்மை கொறடாவாகவும் இருந்தார். இந்திய விடுதலையின்போது "உலக நிகழ்வுகளின் முதன்மைக் காரணத்தாலும், இதுவரை ஆட்சி புரிந்தவர்களின் பெருந்தன்மையான விட்டுக்கொடுத்தலினாலும் வெளிநாட்டு ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுள்ளோம் " என்று கூறியுள்ளார்.

1941-இல் இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இந்தியாவின் நிரந்தர வர்த்தகப் பிரதிநிதியாக ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். பன்னாட்டு நிதியம், உலக வங்கி ஆகிய அமைப்புகளைத் தோற்றுவிக்க இவர் ஆற்றிய பணி கள் பல. மகாத்மா காந்தியின் விருப்பப்படி முதல் நிதி அமைச்சராக

நியமிக்கப்பட்டார், 1947-இல் இந்தியா விடுதலை அடைந்த பின்னர், மகாத்மா காந்தியின் விருப்பப்படி முதல் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். உலகப் போரின் பின்னர் பெரும் பொருளாதார வீழ்ச்சி அடைந்த அந்தக் கால கட்டத்தில் உலக வரலாற்றில் இந்தியப் பிரிவினையின் காரணத்தால் நடைபெற்ற மிகப்பெரிய மதக் கலவரங்கள், இனப் படுகொலைகள், பலகோடி மக்களின் இடமாற்றம், இவற்றால் ஏற்பட்ட பெரும் பொருளாதார வீழ்ச்சியைச் சமாளித்து, சுதந்திர இந்தியாவின் பொருளாதார நிலையை உயர்த்தும் பெரும்பணி ஆர்.கே.எஸ். மீது சுமத்தப்பட்டது.

வாதத் திறமையால் மீட்டெடுத்தார்:

விடுதலைக்குப் பின் பிரித்தானிய இந்தியாவிடம் மாட்டிக்கிடந்த பல நூறு கோடி ரூபாய் அந்நியச் செலாவணியையும், தங்க இருப்பையும் தமது வாதத் திறமையால் மீட்டெடுத்தார். இருப்பினும் இவரது அமைச்சின் அதிகாரி ஒருவரின் விதிமீறல்களுக்கு தார்மீகப் பொறுப்பேற்று பதவியை துறந்தார். இவரையடுத்துப் பதவியேற்ற ஜான் மத்தாய் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு அவர் தவறு செய்யவில்லை; தவறிழைக்கப்பட்டார் ("he is more sinned against than sinning.") எனக் கூறினார். 1952 ஆம் ஆண்டு சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தமிழ்ப் புலமை

சண்முகனார் ஆங்கில மொழித் திறமையுடன் தமிழ் மொழிப் புலமையிலும் தேர்ந்து விளங்கினார். இளம் வயதில் தாய்மொழி தமிழைப் புறக்கணித்து, ஆங்கில மொழி மோகம் கொண்டு விளங்கிய சண்முகனார், தனது வாழ்வின் பிற்காலத்தில் தமிழ் மேல் அளவற்ற மோகம் கொண்டு தமிழ் இலக்கியங்களைப் படித்துத் தேர்ந்து விளங்கினார். சிலப்பதிகாரத்திற்கு எளிய தமிழில் உரை எழுதினார்

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய தமிழில் உரை எழுதி வெளியிட்டார்.

தமிழ் இசை இயக்கத்தைத் தோற்றுவித்தார்

தமிழ் இசை இயக்கத்தைத் தோற்றுவித்தார். தேவாரப் பண் ஆராய்ச்சி கருத்தரங்கங்கள் நடத்தி, தேவாரப் பண்ணிசை இராகங்களை முறைப்படுத்தினார்.

குற்றாலக் குறவஞ்சிக்கு உரை எழுதினார்

தமது ஊரான கோவை மாநகரின் அருகில், நொய்யல் ஆற்றங்கரையில் உள்ள கீழை சிதம்பரம் என்றழைக்கப்படும் திருப்பேரூரில் பேரூராதீனத்தில் அருள்மிகு சாந்தலிங்க அடிகளார் மடாலயத்தில் தமிழ்க்கல்லூரி ஒன்று உருவாகக் காரணமாக அமைந்தார். குற்றாலக் குறவஞ்சிக்கு அழகிய உரை எழுதினார்.

தமிழ்க் கலைக்களஞ்சியம்

ஆர்.கே.சண்முகனார் இந்திய நிதி அமைச்சராக இருந்தபோதுதான் தமிழ்க் கலைக்களஞ்சியம் உருவாக்கப்பட்டு, பதிப்பிப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக இவர் மத்திய அரசிடமிருந்து நிதி ஒதுக்கினார். கம்பராமாயணப் பாடல்கள் எளிமை ஆக்கப்பட்டு ஆய்வுக் கட்டுரைகளோடு வெளிவர, ஆனந்த விகடன் இதழின் ஆசிரியர் எஸ்.எஸ்.வாசனுடன் இணைந்து பணியாற்றினார்.

இலக்கிய மாத இதழ்

"வசந்தம்' என்ற இலக்கிய மாத இதழைத் தொடங்கியதோடு, தம் வாழ்நாளின் இறுதி வரை அதன் பதிப்பாசிரியராகவும் இருந்தார்.

வேறு பணிகள்

துணைவேந்தராகப் பணியாற்றினார்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றி னார்.

தேசிய ஆய்வகங்கள்

1943-இல் இந்திய அரசாங்கம் உருவாக்கிய தொழில் ஆய்வு நிலைக்குழுவின் தலைவராக சண்முகம் நியமிக்கப்பட்டார். இவர் தலைமையிலான இந்தக் குழுவின் பரிந்துரைகளின் காரணமாகவே

அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வுக் குழுவின் கீழ் இந்தியா முழுவதும் 32 தேசிய ஆய்வகங்கள் நிறுவப்பட்டன.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

1950-இல் அன்றைய சென்னை மாகாணத்தை தொழில் மையமாக உருவாக்கப்பட்ட சென்னை தொழில் முதலீட்டுக் கழகம் எனப்படும் இன்றைய தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக நிறுவனத் தலைவராகப் பணியாற்றினார். தேசிய செய்தித்தாள் மற்றும் காகித ஆலையின் செயல் தலைவராக : இந்தியாவிலும், ஆசியக் கண்டத்திலும் மிகப் பெரிய தேசிய செய்தித்தாள் மற்றும் காகித ஆலையின் செயல் தலைவராக இந்திய அரசால் நியமிக்கப்பட்டார். இந்திய வணிக மற்றும் தொழில் சங்கத்தின் கோவை கிளையின் நிறுவனர் மற்றும் தலைவராக இருந்தவர்.

நினைவுச் சின்னம்:

கொங்கு மண்டலத்தின் தலைமகனான ஆர்.கே.சண்முகனாரின் நினைவைப் போற்றும் வகையில், தமிழக அரசு, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்த இருக்கும் கோவை மாநகரில், ஒரு பெரும் நினைவுச் சின்னத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே தமிழார்வலர்களின் வேண்டுகோளாகும். இவருக்கு கோவையில் 2014 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6ஆம் தேதி சிலை திறந்து வைக்கப்பட்டது .

(😊)(😊) @@@@@@@@@@@@ (😊)(😊)

தமிழ்ப் புலமை

சண்முகனார் ஆங்கில மொழித் திறமையுடன் தமிழ் மொழிப் புலமையிலும் தேர்ந்து விளங்கினார். இளம் வயதில் தாய்மொழி தமிழைப் புறக்கணித்து, ஆங்கில மொழி மோகம் கொண்டு விளங்கிய சண்முகனார், தனது வாழ்வின் பிற்காலத்தில்

தமிழ் மேல் அளவற்ற மோகம் கொண்டு தமிழ் இலக்கியங்களைப் படித்துத் தேர்ந்து விளங்கினார்.

சிலப்பதிகாரத்திற்கு எளிய தமிழில் உரை எழுதினார்

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய தமிழில் உரை எழுதி வெளியிட்டார்.

தமிழ் இசை இயக்கத்தைத் தோற்றுவித்தார்

தமிழ் இசை இயக்கத்தைத் தோற்றுவித்தார். தேவாரப் பண் ஆராய்ச்சி கருத்தரங்கங்கள் நடத்தி, தேவாரப் பண்ணிசை இராகங்களை முறைப்படுத்தினார்.

குற்றாலக் குறவஞ்சிக்கு உரை எழுதினார்

தமது ஊரான கோவை மாநகரின் அருகில், நொய்யல் ஆற்றங்கரையில் உள்ள கீழை சிதம்பரம் என்றழைக்கப்படும் திருப்பேரூரில் பேரூராதீனத்தில் அருள்மிகு சாந்தலிங்க அடிகளார் மடாலயத்தில் தமிழ்க்கல்லூரி ஒன்று உருவாகக் காரணமாக அமைந்தார். குற்றாலக் குறவஞ்சிக்கு அழகிய உரை எழுதினார்.

தமிழ்க் கலைக்களஞ்சியம்

ஆர்.கே.சண்முகனார் இந்திய நிதி அமைச்சராக இருந்தபோதுதான் தமிழ்க் கலைக்களஞ்சியம் உருவாக்கப்பட்டு, பதிப்பிப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக இவர் மத்திய அரசிடமிருந்து நிதி ஒதுக்கினார். கம்பராமாயணப் பாடல்கள் எளிமை ஆக்கப்பட்டு ஆய்வுக் கட்டுரைகளோடு வெளிவர, ஆனந்த விகடன் இதழின் ஆசிரியர் எஸ்.எஸ்.வாசனுடன் இணைந்து பணியாற்றினார்.

இலக்கிய மாத இதழ்

"வசந்தம்' என்ற இலக்கிய மாத இதழைத் தொடங்கியதோடு, தம் வாழ்நாளின் இறுதி வரை அதன் பதிப்பாசிரியராகவும் இருந்தார்.

இன்று அன்று | 1892 அக்டோபர் 17

ஆர். கே. சண்முகம் செட்டியார் பிறந்த நாள்

https://www.hindutamil.in/news/blogs/19618-1892-17.html

சுதந்திர இந்தியாவின் முதல் நிதியமைச்சர், காங்கிரஸ் கட்சியைச் சேராதவர் என்றாலும் காந்தியின் பரிந்துரையால் முதல் நிதியமைச்சராக நேருவால் நியமிக்கப்பட்ட ஒரே தமிழர் என்ற சிறப்புகளையெல்லாம் கொண்டவர் ஆர்.கே. சண்முகம் செட்டியார்.

நீதிக் கட்சியில் இருந்த சண்முகம் செட்டியார், 1920-ல் சென்னை மாகாண சட்ட மேலவை உறுப்பினரானார். பிறகு, சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்தார். 1924-ல் அந்தக் கட்சி சார்பில் போட்டியிட்டு மத்திய சட்டசபை என்று அழைக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரானார். மத்திய சட்ட சபையின் துணைத் தலைவர், தலைவர் ஆகிய இரு பதவிகளையும் இவர் வகித்திருக்கிறார். முதல் நிதியமைச்சராக இருந்தபோது இவர் தயாரித்த முதல் பட்ஜெட் அனைவரின் வரவேற்பையும் பெற்றது. காங்கிரஸ் கட்சியைச் சேராதவர் என்றாலும், அவருடைய நிதித் துறை நிர்வாகத்தை காங்கிரஸ் தலைவர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

பெரியாருடைய சீர்திருத்தக் கருத்துகளால் கவரப்பட்டு, தனது பதவிக் காலத்தில் அவற்றை அமல்படுத்தினார். காந்தி, தாகூர், அன்னி பெசன்ட், சித்தரஞ்சன் தாஸ், அவ்வை டி.கே. சண்முகம், சி.என். அண்ணாதுரை என்று பல துறைகளைச் சேர்ந்தவர்களுடனும் சண்முகம் செட்டியார் நட்புகொண்டிருந்தார்.

டெல்லி தமிழ்ச் சங்கம், லண்டன் தமிழ்ச் சங்கம் போன்றவற்றைத் தோற்றுவித்தவர்களில் அவரும் ஒருவர். கோவையில் பஞ்சாலைகள் உருவாகவும் கோவை மாபெரும் தொழில் நகரமாகவும் அவருடைய பங்களிப்புகள் ஏராளம்.

இந்தியாவின் முதல் நிதி அமைச்சர் கோவையை சேர்ந்த ஒரு தமிழர், ஆர்.கே சண்முகம் பற்றி பலரும் அறியாத உண்மைகள்!

https://tamil.samayam.com/viral-corner/trending/facts-to-know-about-the-first-finance-minister-of-india-rk-shanmugam-chetty-who-born-in-coimbatore/articleshow/104467804.cms?story=1

இந்தியாவின் முதல் நிதி அமைச்சர் ஒரு தமிழர், அதிலும் கோவை நகரை சேர்ந்தவர் என உங்களுக்கு தெரியுமா? ஆம்! ஆர்.கே. சண்முகம் எனும் ராமசாமி கந்தசாமி சண்முகம் செட்டியார் அவர்கள் தான் இந்தியாவின் முதல் நிதியமைச்சர் பதவி வகித்தவர். பிரதமர் நேரு அவர்களுக்கு உடன்பாடு இல்லாதிருந்த போதிலும், மகாத்மா காந்தி அவர்களின் வலியுறுத்தலின் பேரில், இவர் தேர்வு செய்யப்பட்டார் என கூறப்படுகிறது.



ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் 1872ம் ஆண்டு அக்டோபர் 17ம் நாள் கோவையில் பிறந்தவர். இவரது தந்தை

கந்தசாமி செட்டியார். இவரது தாத்தா ராமசாமி செட்டியார் 19ம் நூற்றாண்டில் கோவைக்கு குடிபெயர்ந்து வந்தார். கோவையில் இவரது குடும்பம் மில் தொழில் நடத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோவையில் பள்ளிப்படிப்பை முடித்த சண்முகம் அவர்கள், தனது மேற்படிப்பை மதராஸில் தொடர்ந்தார். மதராஸ் கிறிஸ்டியன் கல்லூரியில் இளங்கலை முடித்த இவர், மதராஸ் சட்டக் கல்லூரியில் சட்டம் முடித்தார். சட்டப்படிப்பை முடித்த உடன் இவர் சிறுது காலம் தனது குடும்ப தொழிலில் கவனம் செலுத்தி வந்தார். பின்னரே, இவர் அரசியலில் களமிறங்கினார்.

கோவை நகராட்சி துணைத் தலைவர்



முதலில் நீதிக்கட்சியில் இணைந்த சண்முகம் அவர்கள் 1917ல் கோவை நகராட்சியின் கவுன்சிலராக தேர்வான இவர், மிக குறுகிய காலக்கட்டத்தில் கோவை நகராட்சியின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் இப்பதவி வகித்த காலக் கட்டத்தில்

கோவை நகராட்சி நிர்வாகத்தில் பல மாற்றங்கள் கொண்டுவந்ததாக அறியப்படுகிறது.

மாநில மற்றும் தேசிய அரசியலில் ஆர்.கே. சண்முகம்



1920ல் சண்முகம் அவர்கள் மதராஸ் மாகாண மதராஸ் சட்ட மேலவையின் (Madras Legislative Council) MLC-யாக தேர்வுசெய்யப்பட்டார். இரண்டாண்டுகளுக்கு பிறகு இவர் இப்பதவியில் இவர் ராஜினாமா செய்தார்.

பிறகு, இவர் ஸ்வராஜ் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். பின்னர், 1924ல் இவர் Central Legislative Assemblyல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜெனிவாவில் நடந்த சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் இந்தியா சார்பாக இவர் 3 (1928, 1929, 1932) முறை பங்கெடுத்துள்ளார்.


பெரியாரின் கொள்கைகளை முன்னெடுத்த சண்முகம்...



CLA-வில் 1932ம் ஆண்டு துணை தலைவராகவும், 1934ம் ஆண்டு தலைவராகவும் பதவி வகித்த இவர், 1935ம் ஆண்டு தோல்வியைத் தழுவினார். இந்த தோல்விக்கு பிறகு மீண்டும் தென்னிந்தியாவிற்கு திரும்பிய சண்முகம் கொச்சினில் 1935ம் ஆண்டு முதல் 1941ம் ஆண்டு வரை திவான் பதவி வகித்தார்.

கொச்சின் துறைமுகத்தை மேம்படுத்த சண்முகம் நிறைய முன்னெடுப்புகள் மேற்கொண்டார் என அறியப்படுகிறது. பெரியாரின் கொள்கைகளையம் இவர் அங்கே முன்னெடுத்து செல்ல முயன்றதாக கூறப்படுகிறது. பின்னர், 1941ல் இவர் மதராஸ்-க்கு திரும்பினார். சிறிது காலம் சண்முகம் அவர்கள் போபால் நவாபிற்கு ஆலோசகராகவும் இருந்துள்ளார்.

இந்தியாவின் முதல் நிதியமைச்சர்



1947ல் இந்தியா சுதந்திரம் அடைந்த உடன் நேரு தலைமையில் ஒன்றிய அரசு அமைந்தது. பொருளாதாரத்தில் நிபுணத்துவம் பெற்றிருந்த காரணத்தால் சண்முகம் அவர்கள் இந்தியாவின் முதல் அமைச்சரவையில் நிதி அமைச்சராக தேசப்பிதா காந்தியின் ஆலோசனையின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால், நேரு அவர்களுக்கு இந்த தேர்வில் உடன்பாடு இருக்கவில்லை. இதனால், நேருவிற்கு சண்முகம் அவர்களுக்கும் ஏற்பட்ட கறுத்து வேறுபாடு காரணத்தால், ஓராண்டிலேயே தனது பதவியில் இருந்து சண்முகம் அவர்கள் ராஜினாமா செய்தார். பின்னர், ஒரு மாத காலம் நேரு அப்பொறுப்பில் இருந்தார். அதன் பின், ஜான் மத்தாய் அவர்களிடம் இந்த பொறுப்பு அளிக்கப்பட்டது.

மரணம்



இதன் பிறகு மீண்டும் 1952ம் ஆண்டு மதராஸ் மாநில சட்டமன்ற உறுப்பினராக சுயேச்சை வேட்பாளராக தேர்வானார்.

பதவியேற்ற குறுகிய காலத்திலேயே சண்முகம் அவர் மாரடைப்பால் (மே 3, 1953) பாதிக்கப்பட்டார். தொடர்ந்த அடுத்த இரு தினங்களில் இரண்டாம் மாரடைப்பு ஏற்பட்டு சண்முகம் அவர்கள் மரணம் அடைந்தார்.

ஆர்.கே.சண்முகம் செட்டியார்

(17.10.1892 - 5.5.1953)

https://www.badriseshadri.in/2009/06/17101892-551953.html

சுதந்தர இந்தியாவின் முதல் நிதியமைச்சர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் என்பவர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இவரைப் பற்றி இதற்குமேல் அதிகமாக எனக்கு ஏதும் தெரிந்திருக்கவில்லை.

பிரதமர் ஜவாஹர்லால் நேருவின் தலைமையில் சுதந்தர இந்தியாவின் முதல் அமைச்சரவை உருவாக்கப்பட்டபோது அதில் காங்கிரஸ் கட்சியில் இல்லாத இருவர் பங்குபெற்றனர். அவர்கள்: நிதியமைச்சர் ஆர்.கே.சண்முகம் செட்டியார்; சட்ட அமைச்சர் அம்பேத்கர். அம்பேத்கர் தனக்கு நிதி போர்ட்ஃபோலியோ கிடைக்கும் என்று எதிர்பார்த்தார் என்று ஓரிடத்தில் படித்தேன். (கிறிஸ்டோஃபர் ஜாஃப்ரிலாட் எழுதிய Dr Ambedkar And Untouchability: Analysing And Fighting Caste என்ற புத்தகத்தில் என்று நினைக்கிறேன்.) ஆக, அம்பேத்கரை மீறி, காங்கிரஸ் கட்சிக்கு வெளியிலிருந்து கொண்டுவந்து இவருக்கு நிதித்துறை என்னும் மிக முக்கியமான பொறுப்பை நேரு கொடுக்கக் காரணம் என்ன? இவர் பொருளாதாரத் துறையில் என்ன சாதித்திருந்தார்?

அமைச்சரவை தொடர்பாக காந்தியிடம் ஆலோசிக்காமல் நேருவும் படேலும் முடிவெடுத்திருக்க மாட்டார்களே? காந்திக்கு சண்முகத்தைத் தெரியுமா? காந்தி என்ன சொல்லியிருப்பார்?

நிதியமைச்சராக இருந்த சண்முகம், ஒரே ஆண்டில் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு கோயம்புத்தூர் திரும்பியது ஏன்? காங்கிரஸ்காரர்கள் என்ன கலகம் செய்து இவரைத் துரத்தினர்?

இந்த மனிதர் பற்றி நமக்குத் தெரிந்த தகவல்கள் மிகக் குறைவே. சுமார் 60 ஆண்டுகள் வாழ்ந்த இவரது வாழ்க்கை வரலாற்றை இவரது பேரன் ஆர்.சுந்தரராஜ், ஒரு பிஎச்.டி ஆய்வுக்கட்டுரையாக எழுதியுள்ளார். அதன் ஜனரஞ்சக வடிவத்தை தமிழ்ப் புத்தகமாக கிழக்கு பதிப்பகம் வெளியிடப் போகிறது.

அதனை எடிட் செய்யும்போதுதான் இந்த மனிதரின் பல குணங்கள், சாதனைகள் எனக்குப் புரிய ஆரம்பித்தது. தமிழகத்தின் மிகப்பெரும் சாதனையாளர்களுல் இவர் ஒருவர். ஆனால் பெரியாருக்கோ, ராஜாஜிக்கோ கிடைத்த அளவு புகழும் பெருமையும் இவருக்குக் கிடைக்கவில்லை.

இவர் காங்கிரஸில் இருந்திருக்கிறார். பிராமணர்-பிராமணரல்லாதார் பிரச்னை வலுத்தபோது காங்கிரஸிலிருந்து விலகியுள்ளார். நீதிக்கட்சியின் ஆதரவில் தேர்தலில் நின்றுள்ளார். பிறகு அந்தக் கட்சியுடனான தொடர்பை நீட்டிக்கவில்லை. பெரியாருடன் நெருங்கிய நட்பு பாராட்டி, சுயமரியாதை இயக்கத்தில் இருந்துள்ளார். ஆனால் சுயமரியாதை இயக்கத்தின் கடவுள் எதிர்ப்புக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாமல் அந்த இயக்கத்திலிருந்து விலகியுள்ளார். அடிப்படையில் பெரியாரின் பிற சீர்திருத்தங்களை ஏற்றுக்கொண்ட இவர், கடவுள் நம்பிக்கையை விடத் தயாராக இல்லை.

இந்தியாவுக்கு சுதந்தரம் வேண்டும் என்று கேட்டுப் போராடிய பலருள் இவர் இருந்திருக்கிறார். ஆனால் முகமது அலி ஜின்னா போல, ஆங்கிலேயர்களுடன் கருத்து வேற்றுமை இருந்தாலும், தெருவில் இறங்கிப் போராடி ஜெயிலுக்குப் போகவில்லை. கடைசிவரை ஆங்கிலேய அரசாங்க அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். ஆங்கில அரசு சார்பில் இவருக்கு ஏதாவது ஒரு பதவி இருந்துவந்தது. ஆனால் அதே நேரம், இந்தியா சுய நிர்ணய உரிமை பெற்று தன்னாட்சி அதிகாரத்துடன் விளங்கவேண்டும் என்பதில் இவர் கடுமையாக உழைத்திருக்கிறார். உதாரணமாக அட்லாண்டிக் பிரகடனம் தொடர்பாக இவர் பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்டுடன் பேசியது.* (இதுபற்றி தனியாக எழுதவேண்டும்.)

இந்திய நிதியமைச்சராக இருந்தபோது பிரிட்டன் இந்தியாவுக்குத் தரவேண்டிய Balance of Payment சுமார் 1,500 கோடி ரூபாயைப் பெறுவதில் முக்கியப் பங்கு வகித்துள்ளார்.

கோயமுத்தூர் பகுதியை தொழிற்சாலைகள் நிறைந்த இடமாக்கியதில் மிக முக்கியமான பங்கு இவருக்கு இருந்திருக்கிறது. கோவையில் SIMA, SITRA போன்ற அமைப்புகளை உருவாக்கியதில் இவருக்குத்தான் முக்கியப் பங்குள்ளது. கொச்சி சமஸ்தான திவானாக 7 ஆண்டுகள் இருந்து, அந்த இடத்தில் பெரும் வளர்ச்சியைக் கொண்டுவந்துள்ளார். தமிழிசை இயக்கத்தில் முக்கியமானவராக இருந்துள்ளார். ராஜா அண்ணாமலை செட்டியாருடன் சேர்ந்து தமிழிசை இயக்கத்தை ஆரம்பித்து, அண்ணாமலை செட்டியாருக்கு அடுத்து அந்த இயக்கத்தின் இரண்டாவது தலைவராக இருந்துள்ளார். அண்ணாமலைப் பலகலைக்கழகத்தின் துணைவேந்தராக இரண்டு ஆண்டுகள் இருந்துள்ளார். சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து உரை எழுதியுள்ளார். (உரையா, ஆய்வுக்கட்டுரையா என்று தெளிவாகத் தெரியவில்லை. ஒரு பிரதி கிடைக்க முயற்சி

செய்துகொண்டிருக்கிறேன்.) தமிழ்க் கல்விக்காக பேரூரில் ஒரு கல்லூரி உருவாக்கியுள்ளார்.

மேலே நான் சொன்னது மிகச் சில துளிகளே. இவரது வாழ்க்கையில் தெரிந்துகொள்ள சுவாரசியமான பல விஷயங்கள் உள்ளன.

தனிவாழ்வில் நிறைய சொத்து சேர்த்துள்ளார். பொதுவாழ்வில் நிறைய சாதித்துள்ளார். ஒருவிதத்தில் பார்த்தால் உலகளாவிய பெருமை பெற்ற முதல் தமிழர் என்று சொல்லலாம். ஆனால் இவர்மீது வெளிச்சமே விழாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

சர்
ஆர். கே. சண்முகம் செட்டியார்



இந்தியாவின் நிதியமைச்சர்

பதவியில்
1947–1949


பிரதமர்	ஜவகர்லால் நேரு
முன்னையவர்	லியாகத் அலி கான்
பின்னவர்	ஜான் மத்தாய்

தனிப்பட்ட விவரங்கள்

பிறப்பு	அக்டோபர் 17, 1892 கோயம்புத்தூர்
இறப்பு	மே 5, 1953 (அகவை 60) கோயம்புத்தூர்
அரசியல் கட்சி	சுயாட்சிக் கட்சி, நீதிக்கட்சி
முன்னாள் மாணவர்	சென்னை கிறித்துவக் கல்லூரி, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை
தொழில்	வழக்கறிஞர்

இந்தியாவின் முதல் நிதியமைச்சர்

ஆர்.கே. சண்முகம் செட்டியார்



தொழில், வணிகம், கலை, இலக்கியம், கொடை, கல்வி, அரசியல் எனப் பலதரப்பட்ட துறைகளிலும் பிரகாசித்தவர் சுதந்தர இந்தியாவின் முதல் நிதியமைச்சரான ஆர்.கே. சண்முகம் செட்டியார். மிகச் சிறந்த பொருளாதார மேதை.

அப்பழுக்கில்லாத அரசியல், ஏழை மக்களின் துயர் நீக்கும் முனைப்பு, காந்தி, நேரு, பெரியார் முதலான தேசத் தலைவர்களின் நட்பு, கொள்கையில் உறுதி, எந்தச் சூழ்நிலையிலும் விட்டுக் கொடுக்காத சுய மரியாதை, தமிழுக்கும் தமிழ் இசைக்கும் காப்பாளர் என தொண்டுள்ளத்தோடு உழைத்த சண்முகம் செட்டியாரின் விறுவிறுப்பான வாழ்க்கை வரலாறு இளைய தலைமுறைக்கு உத்வேகமூட்டும் நடையில்.

நூலாசிரியர் ஆர்.சுந்தர்ராஜ், சண்முகம் செட்டியாரின் நேர்வழிப் பேரன் என்பது நூலின் சிறப்புக்கு மெருகேற்றுகிறது.

வாணியர் இளைஞர் நலச்சங்கம்
VANIYAR YOUTH WELFARE ASSOCIATION
VYWA
உண்மை என்பது எப்போதும் எளிமையானது Truth is Always Simple

டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் பிறந்தநாள் விழா

https://vywa.blogspot.com/2010/10/blog-post_16.html

பொருளாதார மாமேதை,சுதந்திர இந்தியாவின் முதல் நிதி அமைச்சர், டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் பிறந்தநாள் விழா 17-10-2010 அன்று காலை 9-30 மணிக்கு சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்படும்.வாணிய சமூகத்தின் முக்கியத் தலைவர்கள் Prof.Dr.S.V.சிட்டிபாபு MA.,B.T .,D.litt.,திரு. V.தண்டபாணி செட்டியார் உட்பட பலர் கலந்து கொள்கிறார்கள்.அனைவரும் வருக என

வாணியர் இளைஞர் நலச் சங்கம் (VYWA) அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

உலக வங்கி உருவாக்கத்தில்
முக்கியப் பங்களிப்பினை செய்த தமிழர்

https://madrasreview.com/politics/lifestory-of-r-k-shanmugam-chettiar/

ஆர்.கே.சண்முகனார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு எழுதப்பட்ட சிறப்புப் பதிவு - Madras Radicals

இந்தியாவின் முதல் நிதி அமைச்சரும், உலக வங்கி உருவாகக் காரணமானவர்களில் ஒருவருமான ஆர்.கே.சண்முகம் செட்டியாரின் பிறந்த நாள் இன்று.

கோவையில் ஆர்.கந்தசாமி செட்டியார் - ஸ்ரீரங்கம்மாள் தம்பதிக்கு 1892-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதி மகனாகப் பிறந்தார்.

கோவை யூனியன் உயர்நிலைப் பள்ளியில் தமது பள்ளிக் கல்வியை பயின்றார். பின்னர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பட்டப் படிப்பையும், சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பையும் முடித்தார். மிகக் குறுகிய நாட்களே வழக்குரைஞராகப் பணியாற்றி பின்னர் பொதுவாழ்வில் ஈடுபட்டார்.

நீதிக் கட்சியில் இருந்த அவர், 1920-ல் சென்னை மாகாண சட்ட மேலவை உறுப்பினரானார். பிறகு சுயராஜ்ஜியக் கட்சியில் சேர்ந்தார். 1924-ல் அந்த கட்சி சார்பில் போட்டியிட்டு மத்திய சட்டசபை என்று அழைக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரானார்.

சுயமரியாதை இயக்க மாநாட்டின் தலைவராக

1930-ம் ஆண்டில் ஈரோட்டில் நடைபெற்ற இரண்டாவது சுயமரியாதை இயக்க மாநாட்டின் வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்தவர் ஆர்.கே.எஸ் ஆவார். வரவேற்புக் குழுவின் தலைவர் என்கிற முறையில் அவர் ஆற்றிய உரையில் மின்னித் தெறித்தவை - அவரின் கொள்கைச் சான்றாண்மைக்கான ஆவணமாகும்.

" சுயமரியாதை என்பது ஒவ்வொருவருக்கும் தனிப்பெரும் சொத்து. சுயமரியாதை இயக்கம்தான் மக்களின் சிந்தனா சக்தியை வளர்த்திருக்கிறது. மந்திரங்களையும், பாராயணத்தையும், ஜபமாலையை உருட்டுவதையும் விட்டு விட்டு, கதவுகள் எல்லாம் மூடப்பட்டிருக்கும் கோயிலின் மூலையில் அமர்ந்து யாரைத் துதிக்கிறாய்?

கண்களைத் திற! உனது கடவுள் உனக்கு முன்னால் இல்லை என்பதைப் பார்! என்று கூறிய ரவீந்திரநாத் தாகூர் நாத்திகரா?" என்று பேசியவர் சண்முகனார்

1931-ம் ஆண்டில் விருதுநகரில் நடைபெற்ற மூன்றாவது மாகாண சுயமரியாதை மாநாட்டிற்கு தலைமை வகித்தவரும் சண்முகனாரே ஆவார்.

சர்வதேச அவைகளில்

1929-ல் பன்னாட்டு தொழிலாளர் நிறுவன (International Labour Organisation - ILO) மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக கலந்து கொண்டார். 1923 முதல் 1929 வரை மத்திய சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அந்த அவையின் துணைத்தலைவராக 1931-33 ஆகிய ஆண்டுகளிலும், தலைவராக 1933-34 ஆகிய ஆண்டுகளிலும் பதவி வகித்தார்.

1938-ம் ஆண்டு ஜெனிவாவில் உலகநாடுகள் சங்க (League of Nations) கூட்டத்திற்கு இந்தியாவின் சார்பாக சென்றிருந்தார்.

1944-ம் ஆண்டு பிரெட்டன் வுட்ஸ் உலக நாணய மாநாட்டிலும் கலந்து கொண்டார். 1945-ம் ஆண்டு மன்னர்கள் சங்கத்திற்கு அரசியலமைப்பு ஆலோசகராகப் பணியாற்றினார். இந்திய அரசியலமைப்பு சட்டமன்றத்திலும் உறுப்பினராகப் பங்கேற்றார்.

இந்திய விடுதலையின்போது "உலக நிகழ்வுகளின் முதன்மை காரணத்தாலும், இதுவரை ஆட்சி புரிந்தவர்களின்

பெருந்தன்மையான விட்டுக் கொடுத்தலினாலும் வெளிநாட்டு ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுள்ளோம்" என்று கூறியுள்ளார்.

இந்தியாவின் நிரந்தர வர்த்தகப் பிரதிநிதியாக

1941-ல் இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இந்தியாவின் நிரந்தர வர்த்தகப் பிரதிநிதியாக ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். பன்னாட்டு நிதியம், உலக வங்கி ஆகிய அமைப்புகளை தோற்றுவிக்க நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்களிப்பு செய்தவர்

1947-ல் இந்தியா விடுதலை அடைந்த பின்னர், இந்தியாவின் முதல் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

தமிழிசை இயக்கப் பணிகள்

தமிழிசை இயக்கத்தைத் தோற்றுவித்தார். தேவாரப் பண் ஆராய்ச்சி கருத்தரங்கங்கள் நடத்தி தேவாரப் பண்ணிசை இராகங்களை முறைப்படுத்தினார்.

சிதம்பரம் அண்ணாமலை செட்டியார் தமிழிசை இயக்கம் ஒன்றை ஆரம்பித்து தமிழில் பாடல்களைப் பாடுவதற்காக ராஜா அண்ணாமலை மன்றத்தை சென்னையில் உருவாக்கியபோது அவருடன் இருந்தார் ஆர்கேஎஸ்.

தில்லித் தமிழ்ச் சங்கம், லண்டன் தமிழ்ச் சங்கம் போன்றவற்றை தோற்றுவித்தவர்களில் அவரும் ஒருவர்.

சென்னை, கோவை தொழில் நகரங்களாக மாறியதில் இவரின் பங்கு 1950-ல் அன்றைய சென்னை மாகாணத்தை தொழில் மையமாக்க உருவாக்கப்பட்ட சென்னை தொழில் முதலீட்டுக் கழகம் எனப்படும் இன்றைய தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக நிறுவனத் தலைவராகப் பணியாற்றினார்.

கோவையில் பஞ்சாலைகள் உருவாகவும், கோவை மாபெரும் தொழில் நகரமாகவும் சண்முகம் செட்டியாரின் பங்கு முக்கியமானது.

“இன்றைய தினமும் நமது சென்னை மாகாணத்தை எடுத்துக் கொண்டாலும் ஏறக்குறைய 4 கோடி ஜனங்களுக்குள் விஷயங்களைப் பாகுபடுத்தி மக்களுக்கு நன்றாய் விளங்கும்படி செய்யவும், விவகார ஞானத்துடன் விவகரிக்கவும், எதிரிகளின் சூழ்ச்சிகளை அறியவும் தக்க யோக்கியதை உடையவர்கள் எந்த வகுப்பிலிருக்கின்றார்கள் என்றால் பார்ப்பனரல்லாதார் வகுப்பில்தான் இருக்கிறார்கள். அவர்களில் சிறந்தவர்கள் என்று சொல்லத்தக்கவர்கள் யார் என்று பார்த்தால் நமது ஸ்ரீமான்கள் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் அவர்களையும், சென்னை ஸ்ரீமான் ஏ.ராமசாமி முதலியார் அவர்களையுமே சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட இருவரும் பிரகாசிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்று யோசித்தால் நமது பார்ப்பனப் பத்திரிகைகளின் விஷமமேயல்லாமல் வேறல்ல." என்று 19.09.1926 அன்றைய குடியரசில் சண்முகனார் குறித்து பெரியார் எழுதியிருப்பார்.

பேரறிஞர் அண்ணாவால் “திராவிட மணி’ , “தென்னாட்டு தாகூர்’ என்று புழகபட்டவர் ஆர்.கே. எஸ். புகழுக்குரிய சண்முகம் செட்டியார் மே 5, 1953 அன்று கோவையில் இயற்கை எய்தினார்.

‘தமிழிசைத் தளபதி’

கூர்த்த மதிபடைத்த ஆர்.கே.சண்முகம்!

https://www.keetru.com/index.php/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/29244-2015-09-25-02-44-01

தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே, தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என முத்தமிழாகத் தழைத்துச் செழித்து விளங்கியது. ஆனால், “தமிழ் மொழி இசைக்கு உரியதில்லை, தெலுங்கிலும், வடமொழியிலும் உள்ள இசைநயம் தமிழுக்கு இல்லை; சங்கீதம் நாதவித்தை; அங்கே மொழிப் பிரச்சனையைப் புகுத்தக் கூடாது; தமிழில் பாடினால் இசை நயம் குன்றிப் போகும்; கர்நாடக சங்கீதத்தின் புனிதம் கெட்டுவிடும்; தமிழில் உயர்ந்த பாடல்களும் இல்லை” என்றெல்லாம் ஒரு கூட்டம் கூச்சலிட்டது. தமிழ் நாட்டில் பிறந்த, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள்தான் இத்தகைய கூச்சலை கூச்சமின்றி கூறித் திரிந்தனர். இச்சூழலில் தமிழுணர்வு கொண்ட தமிழர்கள் குமுறி எழுந்தனர்.

rkshanmugam"சங்க காலத்திலும், சமய இலக்கியத்திலும் வளமும் நலமும் ஊட்டிய தமிழிசைக்கு எதிர்ப்பா? வேற்றுமொழிப் பாடல்களைத் தமிழ் மக்களிடையே, தமிழ் நாட்டிலேயே, பாடுகிற அவலம் பரவி வருவதை வேருடன் நீக்கியாக வேண்டும்" எனத் தமிழ்ச் சான்றோர், 'தமிழிசைச் சங்க' த்தை 1940 ஆம் ஆண்டு தோற்றுவித்தனர். தமிழிசைச் சங்கத்தின் இரு கண்களாக செட்டி நாட்டரசர் அண்ணாமலையாரும், டாக்டர் ஆர்.கே.சண்முகமும் விளங்கினர்.

தமிழிசைச் சங்கம் பல மாநாடுகளை நடத்தியது. தமிழிசையின் செழுமைக்குத் தொண்டாற்றியது. தமிழர்களிடம் தமிழுணர்வை ஊட்டியது.

தமிழிசையின் உயிர் நாடியான பண்களைப் பற்றிய ஆராய்ச்சியில் மிகுந்த ஆர்வம் கொண்டு, பண் ஆராய்ச்சிக்குழுவை உருவாக்கினார் ஆர்.கே.சண்முகம்.

இயற்றமிழ், இசைத்தமிழ் முதலியவற்றிற்குத் தொண்டாற்றியதுடன், நாடகத் தமிழுக்கும் புத்துயிரளிக்கும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரால் இயற்றப்பெற்ற 'சரபேந்திர பூபால குறவஞ்சி' நாடகத்தை, தமிழிசைச் சங்கத்தில் பன்முறை நிகழ்வித்தார். அரசியல் சூழல் காரணமாகப் பல்லாண்டு காலமாக மறைந்து கிடந்த

‘குறவஞ்சி’ நாடகத்திற்குப் புத்துயிர் அளித்தார். வானொலியிலும் அந்நாடகத்தை ஒலி பரப்பச் செய்தார்.

ஜி.யு.போப் மொழி பெயர்த்த திருவாசகத்தை படித்து வியந்து, “எங்கோ பிறந்து, தமிழ்நாட்டிற்கு வந்து, திருவாசகச் சிறப்பை உலகமறியச் செய்திருக்கும் அறிஞர் ஜி.யு.போப் எழுத்தைப் படித்த பிறகல்லவா, எனக்கு திருவாசகப் பெருமை தெரிய வந்துள்ளது! என் தாய்மொழியில் எழுதப் பெற்ற அருள் நூலை, அயல் மொழியாளர் எடுத்துரைக்க, நான் அறிந்து கொள்ளும் அவலத்தை என்னவென்று நினைக்க?" என உள்ளார்ந்து வருந்திய அப்பெருமகனார், அன்றிலிருந்து தமது வழக்கத்தையும், பழக்கத்தையும் மாற்றிக் கொண்டார்.

திருவாசகம், தேவாரம், திவ்வியப் பிரபந்தம் என, அருள் நூல்களை மிகுந்த ஆர்வத்துடன் படித்தார். ஓர் தமிழாசிரியரைக் கொண்டு முறையாகத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார்.

தமிழ் நூல்களைச் சந்திபிரித்துப் பதிப்பிப்பதே சிறப்பெனக் கருதினார். அத்தகைய தமது நோக்கத்தைச் செயற்படுத்தும் விருப்பத்தில், தம்மை மிகவும் கவர்ந்த சிலப்பதிகாரத்துக்குத் தாம் கற்ற குறிப்புகளையெல்லாம் திரட்டி, ஓர் சிறந்த உரை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார். தமிழ் அறிஞர் உலகம்,

கூர்ந்த மதிபடைத்த ஆர்.கே.சண்முகம் செட்டியாரின் உரைநூலைப் பாராட்டிப் போற்றியது!

சிலப்பதிகாரப் பதிப்பின் முன்னுரையில், "சிலம்பைப் படிக்கப் படிக்க என் உள்ளத்தில் மகிழ்ச்சியும், துக்கமும் கலந்து எழுந்தன. உலகில் பல மொழிகளில் உருவாகியுள்ள பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம் எத்தகைய சிறப்பிற்குரியதென்பதை அறிந்தபோது நெகிழ்ந்து மகிழ்ந்தேன். நம் தமிழ் முன்னோர் நமக்குத் தந்த இப்பெருஞ்செல்வத்தைப் பற்றி இதுகாறும் அறியாமலும் அனுபவிக்காமலும் இருந்துவிட்டோமே" என வருந்தினேன்.

"நான் வாழும் நாடு இளங்கோவடிகளும், கம்பனும் பிறந்த நாடு; ஷேக்ஸ்பியரும், மில்டனும் பிறந்த நாடன்று என உணர்ந்தேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

'பண்டிதமணி' கதிரேசன், ஆர்.கே.சண்முகம் பதிப்பித்த சிலப்பதிகாரத்தைப் பாராட்டியதோடு, தாமும் அதே முறையில் திருவாசகத்தை உரையுடன் பதிப்பித்தார்.

ஆர்.கே.சண்முகம், பத்துப்பாட்டில் ஒன்றாகிய, 'குறிஞ்சிப்பாட்டு' இலக்கியத்தை, இனிமையும், எளிமையும் கொண்ட உரைநடையில் எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார்.

கோயம்புத்தூரில் கந்தசாமி செட்டியாரின் தவப்புதல்வனாக 17.10.1892 ஆம் நாள் பிறந்தார் ஆர்.கே.சண்முகம். கோவை இலண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். பின்னர் சென்னைக் கிறித்துக் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்றார். சென்னை சட்டக்கல்லூரியில் சேர்ந்து பயின்று வழக்குரைஞர் பட்டம் பெற்றார்!

சென்னை சட்டக்கல்லூரியில் பயிலுகின்றபோதே, பொது வாழ்வில் ஈடுபாடு கொண்டு, கோவை நகராண்மைக் கழக உறுப்பினராகவும், பின்னர் துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.

சட்டமன்றத் தேர்தலில் 1920 ஆம் ஆண்டு போட்டியிட்டு வெற்றி பெற்றார். சட்டமன்ற உறுப்பினரானது முதல் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். அவரது, சட்ட, பொருளாதார அறிவு நுட்பத்தையும், பேச்சாற்றலையும் கருதி மத்திய அரசு அவரை இந்திய நாட்டுப் பிரதிநிதியாக பல பன்னாட்டு மாநாடுகளுக்கும், கருத்தரங்கங்களுக்கும் அனுப்பியது.

புகழ்மிக்க பொருளாதார மேதையாக விளங்கிய டாக்டர் ஆர்.கே.சண்முகம், கொச்சி சமஸ்தான மன்னரின் வேண்டுகோளுக்கிணங்க 1935 ஆம் ஆண்டு 'திவான்' பொறுப்பை ஏற்றார்.

விடுதலை பெற்ற இந்தியாவின் அமைச்சரவையில், பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆர்.கே.சண்முகம் செட்டியாரை முதலாவது நிதியமைச்சராக நியமனம் செய்தார். பிரிட்டனிடமிருந்து ‘ஸ்டர்லிங்’ கையிருப்பை இந்தியாவிற்கு பெற்றுத் தந்து பெருமைச் சேர்த்தார். நேர்மையான நிதியமைச்சராகவும் விளங்கினார்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகவும், சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் சிறப்பாகப் பணியாற்றினார்.

அரசியல் அறிஞராகவும் - பொருளாதாரச் செம்மலாகவும் விளங்கினார். தமிழ், தமிழிசை, தமிழ்ப்பண், தமிழ்நாடகம் முதலியவை ஓங்கி உயர்ந்து சிறப்படைவதற்கு தமது வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றினார்.

“அரசாங்கம் தமிழில் நடைபெற வேண்டும்; சட்டமன்றத்தில் தமிழில்தான் உரையாற்ற வேண்டும்; பொருளாதாரத்தைத் தமிழில் ஆராய வேண்டும்; அறிவியலைத் தாய் மொழியான தமிழில்தான் கற்க வேண்டும்” என்பதை வலியுறுத்தினார். ‘தமிழிசைத் தளபதியாக’ விளங்கிய ஆர்.கே.சண்முகம் தமது அறுபத்து ஒன்றாம் வயதில் 1953 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

அவர் மறைந்தாலும், தமிழிசைக்கு அவர் ஆற்றிய தொண்டு என்றும் நிலைத்து நிற்கும்!

- பி.தயாளன்

சிலப்பதிகாரம் புகார்க்காண்டம்

டாக்டர் ஆர்.கே.சண்முகம்

https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZh0kxyy.TVA_BOK_0000436

காணொளிகள்

01] ஆர். கே. சண்முகம் வரலாறு

https://www.youtube.com/watch?v=4Rlzcd-8ZtM [5:58]

02] ஆர் கே சண்முகம் செட்டியார் வரலாறு

